# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 68 — 1973 ජූලි 13 වැනි සිකුරාදා — 1973.07.13**

68 ம் இலக்கம்—**1973** ம் ஆண்டு யூலை மாதம் 13 ந் திகதி வெள்ளிக்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி II—சட்டசம்பந்தமானது

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யக்கூடியதாகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மசோதா .. | — | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் .. | — |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் .. | — | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் .. | — |
| உச்சமன்ற அறிவித்தல்கள் .. | — | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் .. | — |
| உச்சமன்ற குற்றவிசாரணைகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் .. | — |
| மாவட்ட மன்ற சிறிய மன்ற அறிவித்தல்கள் .. | 27 | நொத்தாரிசுமார் நிரல் .. | — |
| கடனிறுக்க முடியாமைக்காய வழக்குகளின் அறிவித்தல்கள் .. | — | நாணவிதம் .. | 28 |


**கவனிக்க**—பௌத்த அறநிலையங்கள் (திருத்தம்) சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ந் திகதிய இலங்கை குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் II க்கு குறை நிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## மாவட்ட மன்ற, சிறிய மன்ற அறிவித்தல்கள்

### மல்லாகம் விண்ணப்ப நீதிமன்றம்

இத்தால் அறியத் தருவது யாதெனில், 10.2.1942 தொடக்கம் 31.12.1960 வரை, இக்கோட்டில் தாக்கல் செய்யப்பட்ட சிவில் (காசு சம்பந்தப்பட்ட) வழக்குகளின் பதிவேடுகள் யாவும் (வழக்கு. இல. 12503–12833 வரை) பெறுமதியற்ற பதிவேடுகள் அழிக்கும் சட்ட விதிகளின் பிரகாரம் (479 ம் அத்தியாயம்) இன்றிலிருந்து மூன்று மாதங்களின் பின்பு அழிக்கப்படவிருக்கின்றன.

இவ்வழக்குப் பதிவேடுகளில் சம்பந்தப்பட்ட எவரேனும் குறித்த மூன்று மாதங்களுக்குள் தாமாகவோ, வழக்கறிஞர் மூலமாகவோ, அல்லது அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பம் மூலமாகவோ தகுந்த காரணம் காட்டின் அவ்வழக்குப் பதிவேடுகள் அழிக்கப்படமாட்டாது.

எம். டி. யேசுரத்தினம்,
விண்ணப்ப ஆணையாளர்,
மல்லாகம்.

மல்லாகம்,
1973 ம் ஆண்டு யூன் மீ 21 ந உ.

7–257/1—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

### மல்லாகம் நீதிமன்றம்

இத்தால் அறியத் தருவது யாதெனில், 1.1.1959 தொடக்கம் 31.12.1965 வரை, இக்கோட்டில் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் (கிறிமினல்) வழக்குகளின் பதிவேடுகள் யாவும் (வழக்கு இல. 4444—15799 வரை) பெறுமதியற்ற பதிவேடுகள் அழிக்கும் சட்ட விதிகளின் பிரகாரம் (479 ம் அத்தியாயம்) இன்றிலிருந்து மூன்று மாதங்களின் பின்பு அழிக்கப்படவிருக்கின்றன.

இவ்வழக்குப் பதிவேடுகளில் சம்பந்தப்பட்ட எவரேனும் குறித்த மூன்று மாதங்களுக்குள் தாமாகவோ, வழக்கறிஞர் மூலமாகவோ, அல்லது அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பம் மூலமாகவோ தகுந்த காரணம் காட்டின் அவ்வழக்குப் பதிவேடுகள் அழிக்கப்படமாட்டாது.

எம். டி. யேசுரத்தினம்,
நீதவான்,
மல்லாகம்.

மல்லாகம்,
1973 ம் ஆண்டு யூன் மீ 21 ந உ.

7–257/2—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 5 ந உ.

எல். உபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

# நானுவிதம்

இலங்கை உயர்நீதிமன்றத்தில்

இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளைகள் 1946 (1956 ஆம் இலங்கை சட்ட ஆக்கங்கள் 381 ஆம் அத்தியாயம் திருத்திய பதிப்பு திருத்தப்பட்டவாறு).

1972 ஒத்தோபர் 9 ஆம் தேதி நடாத்தப்பட்ட புத்தளம் 96 ஆம் இலக்கத் தேர்தற்தொகுதி தேர்தல்.

**1972 முதலாம் இலக்க தேர்தல் மனு**

மஹாரியோ கறிப்பா அபூசாலிஹூ, கடுமியன்குளம் தெரு, புத்தளம்

**மனுதாரி.**

**எதிர்**

1. முகமது ஹனிப்பா மஹமூது நயினு மரிக்கார், "ஹனிப்பா வில்லா" வடக்குத் தெரு, புத்தளம்,

2. கடுபிட்டிகே தேவிஸ் சில்வா **அல்லது** கடுப்பிட்டிதே யுவான் சில்வா **அல்லது** விதானே, நவடன்குளம் சந்தி முண்டல் தபால்.

3. அசன் குடுஸ் அஹமது, 9 ஆம் இலக்க ஒழுங்கை, கண்காணிக்குளம் வீதி, புத்தளம்.

4. வர்ணக்குலசூரியா ஜெராமியஸ் பிரனுந்து, கடற்றொழில் அலுவலகம், மங்கள எலியா சந்தி, முண்டல் தபால்.

5. வர்ணக்குலசூரியா வலன்ரீனு எட்மன்ட் பிரனுந்து, கண்டதொட்டுவா, புத்தளம்,

6. மிஹிந்துகுலசூரியா ஜோன் பிரனுந்து, கண்டதொட்டுவா, புத்தளம்.

7. மிஹிந்துகுலசூரியா பஸ்தியான் குரேரா, கண்டதொடுவா, புத்தளம்.

8. மிஹிந்துகுலசூரியா செபஸ்தியான் பின்ரோ, கிலவாமடச்சேனை கடயாமொட்டை, மதுரங்குளி தபால்.

9. ஜயவீர ஆரச்சிகே தொன் சேதிரிஸ் ரணசிங்கா, நவதன்குளம். முண்டல்.

10. வர்ணகுலசூரியா பிரான்சிஸ் பிரனுந்து, நவடன்குளம், முண்டல்.

11. வர்ணகுலசூரியா வின்சன்ற் பிரனுந்து **அல்லது** ஜப்பான் வின்சன்ற், நவடன்குளம், முண்டல்.

12. ஜயக்கொடி ஆராச்சிகே தொன் மாட்டின் அப்புஹாமி, நவடன் குளம் முண்டல்.

**எதிர்வாதிகள்**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளிலுள்ள 6 ஆம் எதிர்வாதியான புத்தளம், கண்டதொடுவாவில் வசிக்கும் மிகிந்துகுலசூரியா ஜோன் பிரனுந்து இறந்துவிட்டார் என்பது திருத்தப்பட்டவாறுள்ள 381 ஆம் அத்தியாயமான இலங்கை பாராளுமன்றத் தேர்தலின் அரச பேரவைக் கட்டளையின் 3 ஆம் அட்டவணையிலுள்ள 29 ஆம் விதியின் கீழும் அதன் நியதிகளுக்கு இணங்கவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இவ்வறிவித்தலை கவனித்துக்கொள்வீராக. இந்த மனு தொடர்புடைய தேர்தல் சம்பந்தமாக மனுதாராக இருந்திருக்கக்கூடிய ஆள் எவரும் இப் பிரசுரத்தின் தேதியிலிருந்து 10 நாட்களுக்குள் மனுவை எதிர்ப்பதற்கு எதிர்வாதியாகச் சேர்க்கப்படுவதற்கு இந்நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம் என்பதை மேலும் அறிவீர்களாக.

லோறி விக்கிரமசிங்க,
உயர்நீதிமன்றப் பதிவாளர், கொழும்பு.

கொழும்பு, 1973, ஜூன் 29.

7—277—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப் படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| யூலை | 6.7.73 | வெள்ளி | 29.6.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 13.7.73 | வெள்ளி | 6.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 20.7.73 | வெள்ளி | 13.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 27.7.73 | வெள்ளி | 20.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| ஓகத்து | 3.8.73 | வெள்ளி | 27.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 3.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 10.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி | 17.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 24.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் | 7.9.73 | வெள்ளி | 31.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 7.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 14.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 21.9.73 | வெள்ளி | ந.ப. 12 00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண் ஓகத்து மீ 18 ந் வ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.